# BSNL ஊழியர் சங்கம்
# தமிழ் மாநிலம்

**சுற்றறிக்கை எண்:14** **தேதி:29.12.2014**

## வெற்றி! வெற்றி!! வெற்றி!!!

அன்பார்ந்த தோழர்களே,

தூத்துக்குடி மாவட்ட நிர்வாகத்தின் ஊழியர் விரோத போக்கினை எதிர்த்து தூத்துக்குடி மாவட்ட சங்கம் பலமுறை சக்தியாக போராடியது. ஆனாலும் மாவட்ட நிர்வாகத்தின் போக்கில் மாற்றம் இல்லை. ஆனால் மாவட்ட நிர்வாகம், நமது மாவட்ட சங்க நிர்வாகி தோழர் வனராஜன் அவர்களை பழிவாங்கும் நோக்கோடு தூத்துக்குடியிலிருந்து கோவில்பட்டிக்கு மாற்றல் செய்தது. BSNL தலைமையக உத்தரவின் படி மாற்றல் உத்தரவுகள் ஏப்ரல் மாதத்தில் தான் போடப்பட வேண்டும். இதனை மாவட்ட நிர்வாகத்துடன் சுட்டிக்காட்டினோம். ஆனால் அவர் ஏற்கவில்லை. மாநில நிர்வாகத்துடன் பேசினோம். அவர்கள் நமது வாதத்தை ஏற்றுக் கொண்டு மாவட்ட நிர்வாகத்திற்கு அறிவுறுத்தினர். அதையும் மாவட்ட நிர்வாகம் ஏற்றுக் கொள்ளவில்லை. **வேறு வழியில்லாததால் நமது மாநில சங்கம் நமது போராட்ட பாதையை தேர்ந்தெடுத்தது. 30.12.2014 காலை பத்து மணி முதல் தூத்துக்குடி மாவட்ட பொது மேலாளர் அலுவலகம் முன்பு மாநில செயலாளர் உண்ணாவிரதம் மேற்கொள்வது என்று மாநில சங்கம் முடிவெடுத்தது. அதற்கான அறிவிப்பை மாநில நிர்வாகத்திடம் கொடுத்தது. இது தொடர்பாக நமது இணையதளத்திலும் வெளியிட்டோம். நமது சுற்றறிக்கையினை அனைத்து மாவட்ட சங்கங்களும் தங்களின் இணையதளத்தில் வெளியிட்டனர். அனைத்து கிளைச்சங்கங்களும் தங்களது அறிவிப்பு பலகையிலும் அந்த சுற்றறிக்கையினை வெளியிட்டார்கள். அருகாமை மாவட்டங்களான நெல்லை, நாகர்கோவில், விருதுநகர் ஆகிய மாவட்டங்களை சார்ந்த தோழர்களும் இந்த உண்ணாவிரதத்தில் பங்கேற்க திரளாக தயாரானார்கள். தூத்துக்குடி மாவட்டம் கம்பீரமாக ஒரு போர்க்களம் காண தயாரானது.**

மாநில நிர்வாகம் நிலைமை விபரீதமாக மாறுவதை உணர்ந்தது. உடனடியாக மீண்டும் தலையிட்டது. வருடத்தின் இடையில் மாற்றல் போடுவது BSNL தலைமையக

உத்தரவிற்கு மாறானது என்று சுட்டிக் காட்டியதுடன், அந்த உத்தரவினை நிறுத்தி வைத்து ஏப்ரல் மாதத்தில் மறுபரிசீலனை செய்ய மாவட்ட நிர்வாகத்திற்கு வழிகாட்டியது. மாவட்ட நிர்வாகமும் வேறு வழியின்றி ஏற்றுக் கொண்டு தோழர் வனராஜன் அவர்களுக்கு போடப்பட்ட உத்தரவினை நிறுத்தி வைத்து உத்தரவினை வெளியிட்டுள்ளது. இது நமது போராட்ட பாதைக்கு கிடைத்திட்ட மிகப்பெரிய வெற்றி.

நமது கோரிக்கையின் நியாயத்தை உணர்ந்து மாவட்ட நிர்வாகத்திற்கு வழிகாட்டிய மாநில நிர்வாகத்திற்கும், போராட்ட களத்தில் உறுதியுடன் நின்ற தூத்துக்குடி மாவட்டச் சங்க தோழர்களுக்கும், அவர்களுக்கு ஆதரவாய் திரள தயாராக இருந்த நெல்லை, நாகர்கோவில், விருதுநகர் மாவட்ட தோழர்களுக்கும், தங்களது இணையதளத்தில் இந்த செய்தியினை வெளியிட்ட அனைத்து மாவட்ட சங்கங்களுக்கும், கிளை அறிவிப்பு பலகைகளில் வெளியிட்ட அனைத்து கிளை செயலர்களுக்கும் வாழ்த்துக்களையும், பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

தொழிலாளி வர்க்கத்தின் ஒன்று பட்ட போராட்டம் தோற்றதாக சரித்திரம் இல்லை என்பதை மீண்டும் நிரூபித்த அனைவருக்கும் தமிழ் மாநில சங்கத்தின் மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம்.

வாழ்த்துக்களுடன்,

தோழமையுள்ள,

(A.பாபு ராதாகிருஷ்ணன்)
மாநில செயலாளர்